உ
திருச்சிற்றம்பலம்

வெளியீடு எண் : 16

துழாவூர் ஆதீன வரலாறு



எழுதியவர் :
'சிவம் பெருக்கும் சீலர்'
சிவத்திரு. வாமதேவ சிவம் (எ)
யாழ். பாலசுந்தரம் பி.ஏ.,பி.எல்.,
தமிழ்நாடு அரசு துணைச் செயலர் (ஓய்வு)
சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர்

வெளியிடுவோர் :
திருக்கயிலாய பரம்பரை
சைவ ஆதீனங்களின் சீடர் குழு,
23, லங்காராம் தெரு, திருநகர், மதுரை 625 006.

உ

பதிப்புரை

அன்புடையீர்! வணக்கம்.

சைவ ஆதீனங்களில் ஒன்றான துழாவூர் ஆதீன வரலாறு 'உழவாரம்' இதழில் வித்வான் சொர்ண காளீஸ்வரன் அவர்களால் எழுதி வெளியிடப் பெற்றது. தற்போது அதன் அடிப்படையில் சிவத்திரு வாமதேவ சிவம் (எ) யாழ். பால சுந்தரம் அவர்களால் எழுதப்பெற்று நூல் வடிவாக ஸ்ரீ நிரம்ப அழகிய தேசிக சுவாமிகள் குருபூஜை விழாவில் வெளிவருகின்றது.

சைவ ஆதீன சீடர் குழுவின் 16ஆவது வெளியீடாக வரும் இந்நூலைப் பெற்றுப் பயன்கொள்க.

ஆசியுரை வழங்கிய ஆதீன கர்த்தர் அவர்கட்கும் எம் பணிவான வணக்கமும் நன்றியும் உரியன.

எழுதி உதவிய சிவத்திரு. யாழ். பாலசுந்தரம் அவர்கள் நுண்மாண் நுழை புலமும் எழுத்தாற்றலும் உடையவர்கள். தக்க மேற்கோள்களுடனும் உரிய சான்றுகளுடனும் இவ்வரலாற்றை எழுதி உபகரித்துள்ளார்கள்.

அவர்களுக்கு எங்கள் நன்றி என்றும் உரித்தாகுக!

தொடர்ந்து சைவ ஆதீன வரலாறுகளை மக்கள் அறியும்படி வெளியிட சைவவுலகு நல்லாதரவு நல்க வேண்டுகிறேன்.

22.9. 2002

23, லங்காராம் தெரு,
திருநகர், மதுரை - 6.

அன்பன்,
நீ.சீ. சுந்தரராமன்,
(கூடல் சுந்தரன்)
அமைப்பாளர்,
சைவ ஆதீனங்களின் சீடர் குழு.

உ

திருச்சிற்றம்பலம்

வெளியீடு எண் : 16

துழாவூர் ஆதீன வரலாறு

ஸ்ரீ நிரம்ப அழகிய தேசிக மூர்த்திகள்

மகா குருபூஜை விழா வெளியீடு

22.9.2002

எழுதியவர் :

'சிவம் பெருக்கும் சீலர்'

சிவத்திரு. வாமதேவ சிவம் (எ)

யாழ். பாலசுந்தரம் பி.ஏ.,பி.எல்.,

தமிழ்நாடு அரசு துணைச் செயலர் (ஓய்வு)

சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர்

வெளியிடுவோர் :

திருக்கயிலாய பரம்பரை

சைவ ஆதீனங்களின் சீடர் குழு,

23, லங்காராம் தெரு, திருநகர், மதுரை 625 006.

குரு தோத்திரம்

சிரம்பரவு சைவநெறி தேர்பொருளாம்
சித்தாந்தம் திகழ்ந்து மன்னர்
பரங்கிரிமுன் சேதுதல மான்மியமும்
பகர்சித்தி உரையுந் தந்து
வரம்பெரு நல்தன வணிக மரபினுக்கும்
குருவாகி வயங்கும் எங்கள்
நிரம்ப அழகிய தேவின் நிரைமலர்த்தாள்
இணை என்றும் நினைந்து வாழ்வாம்.

- சுவாமிநாத யோகி அய்யா.

கயிலைபரம்பரை விளங்கும் கருணைமிகு
மெய்கண்டான் சந்ததிக்கே
குயிலை நிகர் மொழியர் வாழ் துலாவூரில்
கூடியென்றும் மகிழ்ந்து வாழும்
மயிலை நிகருஞ் சாயல் திருமகளும்
வாணியும் சொல்வழி நின்றேத்த
பெயலை நிகர் அருள் பொழியும் நிரம்பஅழ
கியன் தாளை முடிமேல் வைப்பாம்.

- ப. மாசில்லாமணித் தேசிகர்

சீலத்தால் ஞானத்தால் நிரம்ப அழகியராய்ச்
செட்டி மகளிர் குருவாய்த் திகழ் நீதிபுரமும்
கோலத்தால் அங்கணன் நந்தி கயிலையும் செங்
கோல் கொண்டு ஞான நெறி குவலயத்தில் பரவச்
சேலங்கண் மங்களாம்பிகை வாஞ்சிநாதன்
திருஅருளின் பூதிதந்து திகழ் ஞானஒளியார்
பாலங்களாய் நின்று இருவினை ஒப்பாகும் (மல)
பரிபாகம் தந்தருளும் பதமலர்கள் போற்றி.

- காசிவாசி, நடேசானந்தா.



ஸ்ரீலஸ்ரீ நிரம்ப அழகிய தேசிகராகிய
ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

உ

வாழ்க தமிழ் சிவமயம் வளர்க சைவம்

HIS HOLINESS
Sri la Sri Nerambalagiya Desikar @
Gnanaprakasa Desika Paramachariya Swamigal
MADATHIPATHI - THULAVUR MADAM
KUNNAKKUDI - Via (Sivaganga Dt) Pin : 630 206. Tamilnadu

ஸ்ரீலஸ்ரீ நிரம்ப அழகிய தேசிகராகிய ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்
மடாதிபதி, துலாவூர் மடம்.

29 th GURUMAHA SANNIDHANAM
&
AADHEENA KARTHAR

Sri Nerambalagiya Desika
Swamigal Aadheenam

HEREDITARY TRUSTEE :
Sri Varamtharum Vinayakar
Temple
Sri Mangalambigai
Amman Temple
THULAVUR

FOUNDER & PRESIDENT
Saraswathi Mahal Library

CHAIRMAN :
Thulavur Nagarathar Trust

"கயிலைமணி" சிவத்திரு
ஸ்ரீ நி.ஞா.தேசிககுவாமிகள்
நகரத்தார் பெண்கள் குருசுவாமிகள்
துலாவூர் மடம்
குன்றக்குடி வழி
சிவகங்கை மாவட்டம்
தமிழ்நாடு
அ.கு.எண் : 630 206.

ஞு மீ உ Date :17.9.2002.

ஆசி உரை

மதுரை திருநகரில் அமைந்து பணியாற்றி வரும் சைவ ஆதீன சீடர் குழுவினர் நம் ஆதீன அருள் வரலாற்றை 'சிவம் பெருக்கும் சீலர்' சிவத்திரு. வாமதேவ சிவம் (எ) யாழ். பாலசுந்தரம் B.A.B.L., (ஓய்வு பெற்ற துணைச் செயலர், தமிழ்நாடு அரசு) அவர்களைக் கொண்டு சிறந்த முறையில் எழுதச் செய்து நூலாக வெளியிடுவதை அறிந்து மகிழ்ச்சி.

இது போன்ற சிவப்பணிகளைத் தொடர்ந்து செய்து மேலும் சைவ நூல்களை வெளியிட்டுச் சிறப்புறப் பணியாற்ற சைவ ஆதீன சீடர் குழுவினை வாழ்த்துகின்றோம்.

வரலாற்றை எழுதிய சிவம் பெருக்கும் சீலர் மற்றும் பதிப்பிட உதவிய மெய்யன்பர்கள் அனைவரும் எல்லா நலங்களும் வளங்களும் பெற்று ஓங்கிட நம் ஆன்மார்த்த மூர்த்தி அருள்தரு மங்களாம்பிகை சமேத அருள்மிகு வாஞ்சிநாத சுவாமிகள் திருவருளை சிந்திக்கிறோம்.

வளர்க குருபக்தி!
வாழ்க சைவ மரபுகள்!

ௐ

சிவமயம்

துழாவூர் ஆதீன வரலாறு

வரு நிரம்பு பவப் பிணிதீர் கடற்சேது
புராண மருந்துதவி யோவாத
திருநிரம்பு ஞானமணி மருவி நெடுஞ்
சேண் விளங்கித் தெய்வக் கல்வி
தரு நிரம்பி யளவொடசை வின்றியரு
ளருவிதழீஇத் தயங்கு மெங்கள்
குருநிரம்ப வழகனெனுங் குணக்குன்றைத்
துதித்திறைஞ்சிக் குறித்து வாழ்வாம்.

- அளகை சம்பந்த முனிவர் திருவாரூர்ப்புராணம்

என்னாட்டவர்க்கும் இறைவன் தென்னாடுடைய சிவன் என்று கூறுகிறார் மணிவாசகர். "யாதொரு தெய்வங்கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே மாதொருபாகனார் தாம் வருவார்" என்கிறது சித்தாந்தம்.

சிவவழிபாடு மிகவும் தொன்மையானது. ஒரு காலத்தில் சிவ வழிபாடு உலகம் பூராவும் பரவியிருந்தது என்கிறார் ஹீராஸ் பாதிரியார். மெகன்ஜொதாரா, அரப்பா நாகரீகம் இதனை மெய்ப்பிக்கின்றது.

உலகில் நிலவும் எல்லா சமயங்களும் அந்தந்த சமயத் தலைவர்களால் நிறுவப் பெற்றவை. எடுத்துக்காட்டாக கிறித்தவ சமயம் இயேசு கிருத்துவினாலும், முகமதிய மதம் முகமது நபியவர்களாலும், பௌத்த மதம் கௌதம புத்தராலும், சமண சமயம் மகாவீரராலும் தோற்றுவிக்கப்பெற்றன.

ஆனால் எல்லோர்க்கும் முன்னே தோன்றிய முளைத்தானை முழு முதற்கடவுளாகக் கொண்ட சமயம் சைவம் யாராலும் நிறுவப்படவில்லை. இச்சமயம் கல் தோன்றி மண் தோன்றாக் காலம் முதல் நிலவி வருகின்றது.

சிவ வழிபாடும், சைவ சமயமும் நால்வேதத்தை அடிப்படையாகக் கொண்டவை. சுருதி, ஸ்மிருதி ஆகியவை உலக அறிஞர்களால் பாராட்டப் பெற்றவை. "There is no such study as elevating as Upanishads. It is the solace of my life and it will be the solace of my death' என்று ஹோபன் ஹோகர் என்ற அறிஞர் பாராட்டுகிறார். India - a nation of philosopers என்று ஜெர்மானியப் பேரறிஞர் மாக்ஸ் முல்லர் அதிசயிக்கிறார். இவற்றை பிரமாணமாகக் கொண்டு வேதாந்தக் கொள்கை உருவாகியது.

அதற்கு எதிர்மறையாக வேதத்தை ஒப்புக் கொள்ளாமல் அதனை மறுத்துப் புதிதாகச் சில கொள்கைகளும் தோன்றின. அவையே சமண சமயம், புத்த சமயம் ஆகும். இச்சமயங்களில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக் காட்டிப் புராதன சைவ சமயத்தை புனருத்தாரணம் செய்ய அவதரித்தவர்கள் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், மாணிக்க வாசகர் ஆவர். இக்குரவர்களால் குரு, லிங்க, சங்கம வழிபாடுகள் சிறந்தன.

ஒவ்வொரு சமயிகளுக்கும் அவ்வச் சமயங்களில் அருகராக சில மரபுகள், வழிமுறைகள் ஏற்படுத்தப் பெற்றுள்ளன. கிறிஸ்தவ சமயத்தில் ஞானஸ்நானம், முகமதிய மதத்தில் சுன்னத்துக் கல்யாணம், சுமார்த்த மதத்தில் உபநயனம், வைணவ மதத்தில் முத்திரை பதித்தல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம். அதே போல் சமய தீட்சை பெற்றால்தான் சைவ சமயிகள் ஆகவியலும்.

மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற கிரமத்தில் மாதா பிதாவைக் காட்ட பிதா குருவைக் காட்ட, குரு தெய்வத்தைக் காட்டுவார் என்பது நம்பிக்கை. ஆகவே கடவுளையடையக் குருவின் கடாக்ஷம் மிகவும் அவசியம். எனவே ஒவ்வொரு குலத்திற்கும் குல குருவிருந்தனர். சிவஞான போதத்தை அருளிய மெய்கண்டாரது தந்தையாராகிய அச்சுதக் களப்பாளருடைய குலகுரு சகலாகம பண்டிதராக அருணந்தி சிவாச்சாரியார் இருந்தார்.

ஒருவருக்குத் தீட்சை கொடுப்பவர் குரு. அக்குருவிற்குத் தீட்சை கொடுத்தவர் பரமகுரு. அப்பரமகுருவிற்குத் தீட்சை செய்தவர்

பரமேஷ்டி குரு. இப்படித் தொட்டுக் கொண்டே சென்றால் சிவனே, கயிலை நாதனாக, தென்முகக் கடவுளாக, குருவாகக் காட்சியளிப்பார்.

குருவே தினமு மெய்வருந்திக் கொணரு மழியாப் பெருநிதியாங்
குருவே யிரவுபகல் பயிற்றிக் கூறு வடையும் பெருங்கல்வி
குருவே பரமா னந்தத்தைக் கூட்டு மழியாத் திரு வீடு
குருவே மனவா சகங் கடந்து கூறு வரிதாம் பரப்பிரமம்
- பரங்கிரிப் புராணத்தில் நிரம்ப வழகிய தேசிகர்.

ஒருவர் தீட்சை பெற்ற பின்பே சமய நூற்களைக் கற்க அருகர் ஆகிறார் என்பது சைவ சமயிகள் கொள்கை. திருஞான சம்பந்தருக்கு உண்ணா முலையம்மை பாலைக் கொடுத்தும், திருநாவுக்கரசருக்கு அவரது தமக்கையார் திருநீறு அளித்தும், ஆவணங் காட்டிய சிவபெருமானைத் தொட்டுத் தீண்டியதால் சுந்தரருக்கு ஸ்பரிசத்தாலும், திருப்பெருந்துறையில் மாணிக்கவாசகப் பெருமானுக்கு நயனத்தாலும் தீக்கைகள் செய்யப் பெற்றன என்று மேலோர் கூறுவர்.

பரம்பரையாகத் தீட்சை செய்ய யோக்கிதையுடையவர்கள் அபிஷேகஸ்தர்கள். இவர்கள் இல்லறவாசிகள். இவர்களை அபிஷிக்தர் என்று கூறுவர். தென்பாண்டி நாட்டில் இவர்கள் 'குருக்கள்' எனவும் 'பண்டாரத்தய்யா' எனவும் அழைக்கப்பெறுவர். இவர்களிடம் தீட்சைகளையும் அபிஷேகத்தையும் பெற்று ஆச்சாரியர் ஆனவர்களும் தீட்சை செய்ய சமர்த்தர் ஆகின்றார்கள். இவர்களுடன் சிவபெருமானைத் தீண்டும் உரிமை பெற்ற சிவாச்சாரியார்களும் பிறருக்குத் தீட்சை செய்ய யோக்கியர்கள் ஆவர். சித்தாந்த ஆதீனங்கள் தோன்றிய பின் (மதுரை ஆதீனம் விலக்கு) அவ்வாதீன கர்த்தர்களும் தீட்சா குருவாக விளங்கினர். சித்தாந்த ஆதீனங்கள் தோன்றுவதற்கு முன்னுள்ளவர்கள் உபதேச பரம்பரை. தோன்றிய பின்னர் சந்நிதானங்கள் அபிஷேக பரம்பரையாவர். சித்தாந்த ஆதீனங்கள் இருவகைப்பட்டன. பழைய பரம்பரை குல குரு வழியில் வந்த இல்லறவாதீனங்கள், புதிய நியமன முறையில் வந்த துறவற

ஆதீனங்கள். அவர்கள் 'மடாதிபதிகள்' என்ற பெயர் பெற்றார்கள். மற்றவர்கள் 'மடபதிகள்' எனப் பெறுவர். இந்தப் பின்னணியில் நாம் ஒவ்வொரு சைவ ஆதீனங்களின் வரலாற்றையும் ஆய வேண்டியவர்களாகிறோம்.

சோழ நாட்டில் மூவராலும் பாடப் பெற்றதும், முத்தித் தலங்களில் ஒன்றானதுமான திருவாஞ்சியத்தில் சத்தியஞானி கோத்திரம் அபிஷித்தர் பரம்பரை, சைவ வேளாளர்களுக்கும் சோழிய வேளாளர்களுக்கும் குலகுருவாக இருந்து தீக்கைகள் செய்ததுடன் திண்ணைப் பள்ளிக்கூடம் நடத்தி மழலையருக்கும், குழந்தைகளுக்கும், சிறுவர்களுக்கும் எண்ணும் எழுத்தும் கற்பித்து வந்தனர். இவ்வாறு சமயப்பணியும் சமுதாயப் பணியும் இணைந்து செய்யப் பெற்றன.

இந்தப் பரம்பரையில் சத்திய ஞானப்பிரகாசம் என்னும் மகான் பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றினார். இவர்கள் இயற்கையிலேயே வடமொழியிலும், தென்தமிழிலும் புலமை பெற்றவர்கள். ஆகமங்களிலும் திருமுறைகளிலும் தோய்ந்தவர்கள். தென்னாட்டிலுள்ள பற்பல ஸ்தலங்களுக்கும் யாத்திரை மேற்கொண்டு சிவாலய தரிசனம் செய்து, ஆங்காங்கேயுள்ள பெருமக்களிடம் ஆகமங்களிலும், தோத்திரங்களிலும் உள்ள நுண்பொருளை உசாவி அறிந்தார்கள். இதன் பயனாக விரிந்து பரந்த சிவாகமங்களின் உட்பொருளை நன்கு கிரகித்து வடமொழியில் 'சகலாகம சார சங்கிரஹம்' என்னும் புதிய நூலை இயற்றியருளினார்கள். இது பத்ததிகள் தோன்று முன்பே தோன்றியது.

பின்னர் நால்வகை தீட்சைகளையும் அபிஷேகத்தையும் பெற்று திருமணமும் செய்து கொண்டு பிறருக்குத் தீக்கை செய்யும் அருகதையும் பெற்று ஒரு நிலைத்த ஸ்தாபனத்தை நிறுவத் திருவுளங் கொண்டார்கள். இவர்களது தீட்சா நாமம் நிரம்ப அழகிய தேசிகராகும்.

நிரம்ப அழகியர் என்பது பரிபூரணனாகிய சிவபெருமானது பெயர்களிலொன்று. திருவாசகத்தில் பயின்று வருவது.

திருமுறைகளில் வரும் சொல்லாட்சிகள் ஈடிணையற்றவை. அவற்றைப் பெயராகச் சூட்டும் வழக்கமுமிருந்தது. திருவிசைப்பாவில் வரும் 'நீறணி பவளக் குன்றம்' என்ற பெயருடன் ஆடல் வல்லாள் ஒருத்தி இருந்ததை இராஜ ராஜ சோழன் கல்வெட்டு பேசுகின்றது. 'தேவர் சிங்கம்' என்ற அப்பர் வாக்கைக் கொண்டு தேவர் சிங்க முதலியார் என்ற பெயர் தொண்டை மண்டலத்தில் விளங்குகின்றது. 'ஆடினாய் நறு நெய்யொடு' என்ற திருஞானசம்பந்தர் தேவாரத்தில் பயின்று வரும் 'சிற்றம்பல நாடி' என்ற பெயரை உமாபதி சிவத்தின் சீடர் காழிகங்கை மெய்கண்டாரது சீர் பெற்றுள்ளார். அவரே 'காழி பழுதை கட்டி சிற்றம்பலநாடி பண்டாரம்'.

தமது உள்ளக் கிடக்கையின் வண்ணம் ஸ்ரீ முக ஆண்டு உத்திராயணம், வசந்த ருது, ரிஷப மாதத்தில் **(கி.பி. 913)** நிரம்ப அழகிய ஆதீனத்தை நிறுவி குருமுதல்வராக இருந்து சமய பரிபாலனம் செய்து வந்தார்கள். தம்மைச் சார்ந்த சைவ வேளாளர்களுக்கும், சோழிய வேளாளர்களுக்கும் ஆச்சாரிய மூர்த்தியாகவிருந்து தீக்கை செய்து வந்தார்கள்.

தமக்குப்பின் சமய பரிபாலனம் செய்ய தமது மூத்த குமாரருக்கு நால்வகை தீக்கையும், அபிஷேகமும் செய்து சிவஞான குரு தேசிகர் என்ற நாமம் சூட்டி சைவ வேளாளர்களுக்கும் சோழிய வேளாளர்களுக்கும் ஆச்சாரியராக ஏற்படுத்தினார்கள். தம் இரண்டாவது குமாரர் மங்களேஸ்வரருக்குத் திண்ணைப் பள்ளிக்கூடம் நடத்திக் குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் எண்ணும் எழுத்தும் கற்பிக்கும் ஆசானாகவும், சீடர்களுக்குப் பூர்வ மற்றும் அபரக்ரியை செய்யும் அதிகாரத்தையும் வழங்கி பரிணாமத்தில் இருந்து வந்தார்கள். சில காலம் சிவயோக சமாதியிலிருந்து **(கி.பி.943)** சோப கிருது ஆண்டு புரட்டாசி மாதம் அமர பட்ச பிரதமை திதியில் முத்தி பெற்றார்கள். அத்தினத்தையே நிரம்பவழகிய ஆதீனத்தில் மகா குருபூஜைத் திருநாளாக நடத்தப் பெறுகிறது.

நிரம்ப அழகிய குருமூர்த்திக்குப் பின் இரண்டாவதாக சிவ ஞான தேசிக குருமூர்த்திகள் **(கி.பி.943–971)** மூன்றாவதாக சபாபதி

தேசிக குரு மூர்த்திகள் (கி.பி.971–995) நான்காவதாக பொன்னம்பல தேசிக குருமூர்த்திகள் (கி.பி.995–1026) ஐந்தாவதாக பூரண சுந்தர தேசிக குருமூர்த்திகள் (கி.பி.1026–1058) ஆறாவதாக இரண்டாம் சபாபதி தேசிக குரு மூர்த்திகள்(கி.பி.1058–1087) ஏழாவதாக இரண்டாம் பூரண சுந்தர தேசிக குரு மூர்த்திகள்(கி.பி. 1087–1115) எட்டாவதாக மாசிலாமணி தேசிக குரு மூர்த்திகள்(கி.பி.1115–1167) ஆதீனகர்த்தர்களாக இருந்தனர்.

முன்னொரு காலத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் ஆண்ட சோழ அரசனுக்கும், இரத்தின தன மகுட பூபால வைசியர்களாகிய நாட்டுக் கோட்டை நகரத்தார்களுக்கும் கடுமையான கருத்து வேற்றுமையும் அதனால் கடும் பகையும் உண்டாயிற்று. மானிகளான செட்டிப்பிள்ளைகள் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் ஒரு சேர எண்ணூறு குடும்பத்தார் ஏரியில் மூழ்கி உயிர் துறந்தனர். பள்ளிக்குச் சென்ற சிறுவர்கள் மட்டும் உயிர் தப்பினர். இவர்கள் குலகுருவான சிதம்பரம் அகோர சிவாச்சாரியாரது பொறுப்பில் ஆத்ம நாத சாஸ்திரி என்பவரிடம் வித்யாப்யாசம் செய்து வளர்ந்து ஆளாகினர். அவர்கள் மணப்பருவம் எய்திய போது ஏற்கனவே நகரத்தார் பெண்டிர் அனைவரும் ஏரியில் பாய்ந்து மாண்டதால் நகரத்தார் மரபில் பெண்களே இல்லை. இந்த இக்கட்டான நிலையில் அப்போதிருந்த அரசன் அவர்கள் குருவாகிய அகோரசிவரையும் பிற பெரியோர்களையும் அழைத்து ஆலோசனை செய்து இது போன்ற சமயங்களில் வைசியர்கள் வேளாளர் குலத்தில் பெண் எடுக்கலாம் என்று முடிவு செய்தனர். நகரத்து ஆடவர்களை மணம் செய்து கொள்ள வேளாளப் பெண்கள் ஒரு நிபந்தனை விதித்தனர். திருமணத்திற்குப் பின்னரும் தங்கள் குலகுருவான நிரம்ப அழகிய தேசிகர் ஆதீனமே, குருஸ்தானமாக விளங்க வேண்டும் என்பதே நிபந்தனை. இந்த நிபந்தனையை ஏற்றதால் அவர்களிடைத் திருமண பந்தம் நிகழ்ந்தது.

பின்னர் சிலகாலம் கழித்துப் பாண்டிய மன்னன் தன் நாட்டில் தக்கவர்களை குடியேற்ற விரும்பி சோழ மன்னனிடம் கேட்க

அவ்வரசன் நகரத்தார்களை வினவ அவர்கள் நாங்கள் அனைவரும் முழுமையாக ஒன்றாக வாழ விரும்புகிறோம். ஆதலால் எங்களுக்கு வசிக்கத் தக்க இடமும் எங்கள் உபய குருமார்களுக்கு மடாலயமும் மானியங்களும், மரியாதைகளும் தர வேண்டும் என்று கேட்டார்கள்.

இதற்குப் பாண்டிய மன்னன் சம்மதிக்க ஆண்கள் குருவாகிய அகோர சிவாச்சாரியாரையும், பெண்கள் குருவாகிய நிரம்ப அழகிய தேசிகரையும், உடன் அழைத்துக் கொண்டு பாண்டிய நாட்டில் வைகைக்கு வடக்கு, பிரான் மலைக்குக் கிழக்கு, வெள்ளாற்றிற்குத் தெற்கு, வங்கக் கடலுக்கு மேற்குமான பகுதியில் குடியேறினர்.

வெள்ளாறது வடக்காம் மேற்குப் பிரான் மலையாம்
தெள்ளார் புனல் வைகை தெற்காகும் - ஒள்ளிய நீர்
எட்டிக் கடல் கிழக்காம் இஃதன்றோ நாட்டரண் சேர்
செட்டி நாட்டெல்லையெனச் செப்பு

- பாடுவார் முத்தப்ப செட்டியார்.

எட்டாவது பட்டம் மாசிலாமணி தேசிக குரு மூர்த்திகள்(கி.பி.1115–1167) தமது மூத்த குமாரர் பொன்னம்பல தேசிகருக்கு அபிஷேகம் செய்து சோழிய வேளாளர்களுக்குக் குலகுருவாகவும் இளைய குமாரர் நடராஜ தேசிக குரு மூர்த்திகளை(கி.பி.1167–1198) ஒன்பதாவது பட்டமாக்கினார். மூத்த வாரிசு வேளாக்குறிச்சி ஆதீனமும் (திருப்புகலூர்) நிரம்ப அழகிய ஆதீனமும் (துழாவூர்) சத்ய ஞானி கோத்திரம் (கிரஹஸ்த ஆசிரமம்) இல்லற ஆதீனங்கள். முதற் குமாரருக்குப் பட்டம் கட்டி வம்ச பரம்பரையாகவிருந்து சீடர்களுக்கு உபதேசம் செய்து வருவதை முக்கிய கடமையாகக் கொண்டுள்ளன. நடராஜ தேசிக குரு மூர்த்திகளுக்குப் பின் பத்தாவது பட்டமாக இரண்டாவது மாசிலாமணி தேசிக குரு மூர்த்திகள்(கி.பி.1198–1226) ஆதீனத் தலைவராயினார்.

தமிழ்நாட்டு சைவ ஆதீனங்களின் தலைவர்கள் பொதுவாக ஆதீன முதல்வர்களின் பெயரையே தம்முடைய தனிப் பெயருடன்

இணைத்து வழங்குவார்கள். எடுத்துக் காட்டாக குன்றக்குடி திருவண்ணாமலை ஆதி குரு மூர்த்திகள் தெய்வ சிகாமணி. இவரது பெயரைச் சேர்த்து தெய்வ சிகாமணி ஆறுமுக தேசிகர், தெய்வசிகாமணி அருணாசல தேசிகர், தெய்வசிகாமணி பொன்னம்பல தேசிகர் என்றும், தருமபுர ஆதீன குருமுதல்வர் ஞான சம்பந்தர் என்னும் நாமத்தைச் சேர்த்து சண்முக தேசிக ஞான சம்பந்த பரமாசாரியார் என்றும் மதுரையாதீனத்தார் அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் என்றும் தொண்டை மண்டல ஆதீனகர்த்தர்கள் இயற்பெயரை நீத்துப் பொதுவாக ஞானப்பிரகாச தேசிகர் என்றும் வழங்கப் பெறுகிறார்கள். திருவண்ணாமலை ஆதீனகர்த்தர்கள் தெய்வ சிகாமணி என்றும் தருமை ஆதீன கர்த்தர்கள் ஞான சம்பந்தம் என்றுமே கையெழுத்திடுகின்றனர். திருவாவடுதுறை பண்டாரச் சந்நிதிகள் ஆதி குரு முதல்வர் பெயராகிய நமசிவாயம் என்று கையொப்பம் இடுவார்கள். இந்த மரபு நிரம்ப அழகிய ஆதீனத்திலும் உண்டு. பத்தாவது பட்டம் இரண்டாவது மாசிலாமணி தேசிக குரு மூர்த்திகளுக்குப் பின் பதினொராவது பட்டம் உதய மூர்த்தி தேசிக குரு மூர்த்திகள்(கி.பி.1226–1277) காலத்திலிருந்து ஆதீனத் தலைவர்கள் நிரம்ப அழகிய தேசிகர் என்றே வழங்கப் பெற்றனர். அத்துடன் அவர்கள் தனிப்பெயரையும் இணைத்து நிரம்ப அழகிய தேசிகராகிய உதயமூர்த்தி தேசிக பரமாசாரிய சுவாமிகள் என்று வழங்கப் பெற்றது.

சிவஞான போதமருளிய மெய் கண்ட தேவ நாயனார் (1223) காலத்தில் பதினொராவது பட்டம் நிரம்ப அழகிய தேசிகராகிய உதய மூர்த்தி தேசிகர் அருளாட்சி புரிந்துள்ளார். இவர்களுக்குப் பின் 12 வது பட்டமாக நிரம்ப அழகிய தேசிகராகிய சிதம்பர தேசிக குரு மூர்த்திகள்(கி.பி. 1277–1335). மெய்கண்டாரது உபதேச பரம்பரையில் வந்த நான்காம் குரவர் உமாபதி சிவாச்சாரியார் காலத்தில் இவர்கள் அருளாட்சி புரிந்துள்ளார்கள். 13 வது பட்டமாக நிரம்ப அழகிய தேசிகராகிய 3வது சபாபதி தேசிகர் (கி.பி.1335–1388) 14 வது பட்டமாக நிரம்ப அழகிய தேசிகராகிய வடுகநாத தேசிகர் (கி.பி.1388–

1417) 15 வது பட்டமாக நிரம்பவழகிய தேசிகராகிய இரண்டாவது உதயமூர்த்தி தேசிகர் (கி.பி.1417–1449) 16வது பட்டமாக நிரம்பவழகிய தேசிகராகிய சத்திய ஞான தேசிகர் (கி.பி.1449–1498) பதினேழாவது பட்டமாக நிரம்பவழகிய தேசிகராகிய தாண்டவேஸ்வர தேசிகர் (கி.பி.1498–1541) பதினெட்டாவது பட்டமாக நிரம்பவழகிய தேசிகராகிய 2வது சத்யஞான தேசிகர் (கி.பி.1541–1597) ஆதீனகர்த்தர்களாகவிருந்தனர். இவர்கள் அருளாட்சிக் காலத்தில்தான் பாண்டிய மன்னர் விருப்பத்திற்கிணங்க முன் சொன்னவாறு குடி படைகளை அழைத்துக் கொண்டு கி.பி. 1565ல் பாண்டிய நாட்டை அடைந்தனர். ஆங்கு குன்றக்குடியில் தெற்கு வீதியில் மடம் அமைக்கப்பெற்று மடத்து நிர்வாகத்துக்கு ஏற்ற சொத்துக்களும் கட்டளை விசாரணைகளும் கொடுக்கப்பெற்றன.

பத்தொன்பதாவது பட்டமாக நிரம்பவழகிய தேசிகராகிய சிதம்பர தேசிகர் (கி.பி.1597–1629). இவர்களது தாயார் வேதாரண்யத்தைச் சேர்ந்தவர். இவரது சகோதரர் புதல்வர் திருவிளையாடல் புராணம் பாடிய பரஞ்சோதி முனிவர் ஆவார். இளமையில் வேதாரண்யத்தில் வசித்ததால் இவ்விருவரும் ஒரு சாலை மாணாக்கர்கள் ஆவர். படிப்பை முடித்த பின்னர் வேதாரண்யத்தை விட்டு குன்றக்குடியை அடைந்தார். நிரம்ப அழகிய ஆதீனத் தலைவர்கள் செய்த தோத்திர, சாத்திரப் புராணங்களைப் பின்னர் சிந்திப்போம்.

19வது பட்டத்து சுவாமிகளுக்கு அடுத்து 20வது பட்டமாக நிரம்பவழகிய தேசிகராகிய இரண்டாவது தாண்டவேசுவர தேசிகர் (கி.பி.1629–1684) 21வது பட்டமாக நிரம்பவழகிய தேசிகராகிய சுவாமிநாத தேசிகர் (கி.பி.1684–1735). இவர்கள் காலத்தில் துழாவூர் கிராமம் சிவகங்கை மன்னரால் பரிசாக அளிக்கப் பெற்றது. அக்கிராமத்தில் கிழக்கு நோக்கிய பூஜை மடமும், முன் மண்டபமும் உக்ராணமும் கருங்கல் திருப்பணியாகச் செய்து தமது குமாரர் வசம் பொறுப்புக்களை ஒப்புவித்து துழாவூரில் பரிணாமத்தில் இருந்தார்கள். இவர்கள் முக்தியடைந்தபின் 22வது பட்டமாக நிரம்பவழகிய தேசிகராகிய ஆபதோத்தாரண தேசிகர் (கி.பி.1735–1768)ஆதீன

கர்த்தரானார்கள். இவர்கள் காலத்தில் நாட்டரசன்கோட்டை தீவட்டிக் கொள்ளைக் கலவரம் நிகழ்ந்ததில் சில பெண்கள் தமது விருப்பத்திற்கு மாறாக மானபங்கப்படுத்தப் பெற்றனர். 1947ம் ஆண்டு இந்திய பாகிஸ்தான் பிரிவினையின் போது நடைபெற்ற கொலை கொள்ளை கற்பழிப்புப் போன்று அக்காலத்திலும் நிகழ்ந்துள்ளது. இது குறித்துக் கேட்கப்பட்டபோது தேசப்பிதா மகாத்மா காந்தியடிகள் இஃது ஒரு விபத்துப் போன்றது. அதனால் தோஷம் இல்லை என்று கூறினார். இதே போலவே நாட்டரசன்கோட்டைக் கொடுமைகளை நகரத்தாரது உபய குரு மூர்த்திகளிடம் கூறியபோது இது விபத்தைப் போன்றது குற்றமில்லை என ஒரு சேரக் கூறினார்கள்.

ஆயினும் மனச்சாந்திக்காக காசிக்குச் சென்று கங்கையில் மூழ்கி பிராயச்சித்தம் செய்யலாம் என்று முடிவு செய்யப் பெற்றது. நகரத்தார்கள் உபய குருமூர்த்திகளையும் அழைக்க 22வது பட்டமாக நிரம்பவழகிய குருமூர்த்திகள் தமக்கு வயதாகித் தேகம் தளர்ந்து விட்டதால் தமது இளைய பட்டமாகிய இரண்டாவது வடுகநாத தேசிகரைத் தமது பிரதிநிதியாக காசிக்கு கி.பி.1766ல் அனுப்பி வைத்தார்கள். துவிதிய குருமூர்த்திகள் காசியிலிருக்கும் போது பெரிய குருமூர்த்திகளான 22ம் பட்டத்து சுவாமிகள் கி.பி.1768ல் பரிபூர்ணம் எய்தினார்கள். வாரிசு இல்லாமலோ, அல்லது வாரிசு தெரியாமலோ ஒருவர் இறந்து விட்டால் அவரது சொத்துக்கள் எஸ்செட் என்ற நியதிப்படி அரசாங்கத்தின் கைக்குப் போய்விடும். நிரம்பவழகிய ஆதீனத்து 22ம் பட்டத்து சுவாமிகள் அடங்கிய போது சிவகெங்கை மன்னர் சவரிவல்லப முத்து வடுக நாத ராஜாவால் ஆதீனத்து நிர்வாகம் மேற்கொள்ளப்பெற்றது. பின்னர் ஆதீனத்தின் சொத்துக்கள் கட்டளை விசாரணை பொறுப்புக்கள் பிரான் மலையிலிருந்த திருவண்ணாமலை ஆதீனகர்த்தர் 31வது பட்டம் ஸ்ரீலஸ்ரீ மருதநாயக தேசிகர் வசம் சென்றது.

பின்னர் காசியிலிருந்த மீண்ட இளைய பட்டம் ஸ்ரீலஸ்ரீ வடுகநாத தேசிகர் குன்றக்குடிக்கு வந்து திருவண்ணாமலை ஆதீன கர்த்தரால் வரவேற்கப் பெற்று நிரம்பவழகிய ஆதீனத்தின் 23ம்

அதிபரானார்கள். ஏற்கனவே துழாவூரில் 21ம் பட்டத்து அதிபரால் கட்டப் பெற்ற பூஜை மடத்துக்கு அருகில் குடியேற ஒரு வீடு கட்டப்பெற்றது. பின் கி.பி.1771–ல் குன்றக்குடியிலிருந்து பல்லக்குப் பரிவாரங்களுடன் 32 விருதுகளுடனும், சகல மரியாதைகளுடனும் துழாவூருக்கு தம் ஆத்மார்த்த மூர்த்தியுடன் எழுந்தருளினார்கள். அதிலிருந்து நிரம்பவழகிய ஆதீனம் 'துழாவூர் ஆதீனம்' என்ற பெயரும் பெற்றது. துழாவூரில் விநாயகர் கோயில், மங்களாம்பிகை கோவில், வளநாட்டுக் கருப்பர் கோவில், ஆதீனமிளகி ஐயனார் கோவில் ஆகிய கோவில்கள் அமைந்தன. இவர்கள் ஆட்சிக்காலம் (கி.பி. 1768–1799) பின் 24–ம் பட்டமாக ஸ்ரீஆபதோத்தாரண தேசிக சுவாமிகள் (கி.பி.1799–1828) பின் 25வது பட்டமாக மூன்றாவது சத்தியஞான தேசிக சுவாமிகள் (கி.பி.1828–1860) ஆட்சிக்கு வந்தார்கள். இவர்கள் சித்த வைத்தியம் செய்வார்கள். இவர்கள் தமிழ், வடமொழிச் சுவடிகளை வழக்கம் போல் புதுப்பித்தார்கள். இவர்களுக்கும் புத்திர பாக்யம் இல்லை. 26வது பட்டமாக குமாரசாமியய்யாவின் துவிதிய குமாரர் உதயமூர்த்தி தேசிகரைப் பிள்ளை கூட்டி அபிஷேகம் செய்வித்தார்கள். (கி.பி.1860–1880) இவர்களுக்கும் குழந்தை இல்லாததால் துழாவூரில் இருந்த வடுகநாத பண்டாரத்தின் மகன் அருணாசலத்தை அபிமானித்தார்கள். கல்வி கேள்விகளில் பயிற்றுவித்து தீட்சா சமஸ்காரமும் செய்து வைத்தார்கள். அருணாசலம் பின்னர் திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடியில் ஆசிரமம் பெற்று தம்பிரானானார்கள். மேற்கல்வி பயில சென்னையிலிருந்த திருவண்ணாமலையாதீனத்துக்குச் சொந்தமான நாட்டுப் பிள்ளையார் கோவில் தெருவிலிருந்த மடத்திலிருந்து ஸ்ரீமத் ஆறுமுகத் தம்பிரானிடம் பாடம் கேட்டு வந்தார்கள். அதுபோது திருவாவடுதுறை ஆதீனத்தின் வித்வான் தாண்டவராயத் தம்பிரான் சுவாமிகள் சென்னை கோவிந்தப்ப நாயக்கன் தெருவிலிருந்த திருவாவடுதுறையாதீனக் கிளை மடத்திலிருந்தார்கள். இவர்கள் மூலம் துழாவூராரை திருவாவடுதுறையாதீன 16ம் பட்டம் மேலகரம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்கள் அறிவார்கள். ஏற்கனவே துவிதிய குருவாகவிருந்த ஸ்ரீலஸ்ரீ நமச்சிவாய தேசிகர் சுப்பிரமணிய

தேசிகருக்கு முன்னரே பரிபூரணம் எய்தியதால் வருத்தமுற்றிருந்த தேசிகர், துழாவூராரை கும்பகோணத்தில் மகாமகத்தில் திருக்கண் சாற்றியருளி 'அம்பலவாண தேசிகர்' என்ற தீட்சாநாமம் சூட்டி திருவாவடுதுறையாதீனத்து இளைய பட்டமாக்கியருளினார்கள். இவர்கள் காலம் திருவாவடுதுறையாதீனத்தின் பொற்காலங்களில் ஒன்றாகும். அழகும் கம்பீரமும் கொண்ட தோற்றப்பொலிவுடைய இவர்கள் சகலகலா வல்லவர்.இவர்கள் காலமுதல் துழாவூர் ஆதீனத்துக்கும், துறைசையாதீனத்துக்கும் நல்லுறவு நிலவுகின்றது. நிற்க.

26வது பட்டமாக குருபீடத்தை அலங்கரித்த உதயமூர்த்தி தேசிகருக்கும் புத்திரப்பேறு இல்லாமையால் ஆபதோத்தாரண பண்டாரம் என்பவர் புத்திரர்களில் ஒருவரான ஞானப்பிரகாச தேசிகரை மந்திர சுவீகாரம் செய்து அபிஷேகம் செய்து 27வது பட்டம் கட்டினார்கள். 27வது அதிபரின் காலம் (கி.பி.1880–1923) இவர்கள் உதவிய ஏட்டுச் சுவடிகளைக் கொண்டு தேவகோட்டை மேல வீடு ஸ்ரீமான் வீர. லெ. சின்னய செட்டியார் 1900–ல் நாட்டுக்கோட்டை நகரத்தார் சரித்திரம் என்ற வரலாற்று நூலை வெளியிட்டார்கள். இவர்கள் காலத்தில் உ.வே. சாமிநாதய்யர் துழாவூருக்கு வகை புரிந்து சுவடிகளை ஆய்வு செய்து சிவஞான சித்தியார் உரை, திருவருட்பயன் உரை, உண்மை நெறி விளக்கவுரை, சேது புராணம், திருப்பரங்கிரி புராணம், சிவபுண்ணியத் தெளிவு முதலான சுவடிகளைப் பெற்றுச் சிலவற்றை அச்சிட்டார்கள்.

28–வது பட்டமாக பால உதய மூர்த்தி தேசிகர் (கி.பி.1923–1985) ஆட்சி செய்தார்கள். இவர்கள் பூஜை மடத்தை ஒட்டி பெரிய வீடாக கட்டினார்கள். இவர்களுக்கு இரு மனைவியர். மூத்தவருக்குப் புத்திர பாக்கியம் இல்லாமையால் அவர் தங்கை ஜானகி அம்மையாரையும் மணந்தார். இவருக்கு ஞானப்பிரகாசம் (1942) தியாகராஜன் (1946) என்ற இரு புதல்வர்கள். உபய நாச்சியார்களுடன் 1964–ல் சிவ ஆகமோக்த சஷ்டியப்த பூர்த்தி நிகழ்ந்தது. இவர்கள் காலத்தில் பாண்டிச்சேரியிலிருந்து பிரஞ்ச் இன்ஸ்டிடியூட் ஆஃப்

இண்டாலஜியைச் சேர்ந்த N.R. பட் மூலம் ஆகம ஏடுகளும் உபாகம ஏடுகளும் ஆதி குருமூர்த்திகள் நிரம்ப அழகிய தேசிகர் அருளிய சகலாகம சார சங்கிரஹம் ஏட்டுச் சுவடிகளும் அனுப்பி வைக்கப்பட்டன. நிற்க.

துழாவூர் ஆதீனம் நகரத்தார் ஆச்சிமார்களுக்கு உபதேச மடம் என்பது அனைவரும் அறிந்ததே. 1939–1944 இரண்டாவது மகா யுத்தம் நடைபெற்றதாலும் அதன் பின்னர் ஏற்பட்ட ஆட்சி மாற்றங்களாலும் திரைகடல் ஓடித் திரவியம் தேடிய நாட்டுக்கோட்டை நகரத்தார் சொல்லொணாத் துயரத்திற்கு ஆளாயினர். கோடீசுவரர்கள் நொடியில் நல்குரவால் வவ்வப் பெற்றனர். இதன் விளைவாக துழாவூர் ஆதீனமும் பொருளாதார நெருக்கடிக்கு ஆளானது. குப்புற விழுந்த குதிரை குழியும் தோண்டியது என்னும் பழமொழிக்கு இணங்க இந்தியா சுதந்திரமடைந்த பின்னர் எழுந்த இனாம் ஒழிப்புச் சட்டம் பின்னும் இன்னலைக் கூட்டியது.

முன்பு வருவாய்க்கு வழி இருந்தது. இப்போது போதிய வருமானம் இல்லை. உபதேசம் பெறுவோர் அளிக்கும் காணிக்கையும் குருபூஜை போன்ற விழாக்களில் அன்பர்கள் அளிக்கும் காணிக்கையுமே வருமானம்.

பொருளாதாரத்தில் நலிவுற்ற நாட்டுக்கோட்டை நகரத்தார் முன்னர் போல் காசுக்கடைத் தொழில் மட்டுமல்லாமல் பல தொழில்களிலும் ஈடுபட்டனர். எல்லாத் துறைகளிலும் இன்று ஏற்றம் பெற்றுள்ளனர். பஞ்சாலைத் தொழில், பல்கலைக் கழகம், சைகிள் தொழிற்சாலை, பத்திரிகை தொழில், பதிப்பகத் தொழில், கல்வித் துறை, இலக்கியத் துறை, அரசியல் ஆகியவற்றில் முத்திரை பதித்துள்ளனர். தமிழ்நாட்டில் நாட்டுக்கோட்டை நகரத்தார்களும் நாடார்களும் பொருளாதாரமுன்னேற்றத்திற்கு இன்றியமையாதவர்கள். நாட்டுக்கோட்டை நகரார்த்தார்கள் செழிப்படைவதால் துழாவூர் ஆதீனமும் செழிப்படைய பெரும் வாய்ப்புள்ளது.

துழாவூரில் நித்திய பூசை நிரந்தர நிதித்திட்டமும் துழாவூர் நகரத்தார் அறக் கட்டளையும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தேவகோட்டை

இளைய ஜமீந்தார் திருவாளர் அழ. அரு. சோம. நாராயணன் செட்டியார், தமிழறிஞர் காசிஸ்ரீ அரு. சோமசுந்தரம் செட்டியார் இருவரும் துழாவூர் ஆதீனத்தின் பால் பக்தியும் ஈடுபாடும் உடையவர்கள். இதேபோல் லெ. நாராயணன் செட்டியாரும் மடத்தின் பால் மிகுந்த ஈடுபாடுள்ளவர் ஆவார். இவர்கள் ஆற்றும் அரும்பணிகளால் ஆதீனத்தில் குருபூஜை, மகேசுவர பூஜை குறைவற நடக்கின்றன. சைவசித்தாந்தம் பரவவும் பொது தர்மங்கள் நடைபெறவும் பேரளவு உதவியும் செய்து வருகிறார்கள். நிற்க.

28–ம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ பால உதய மூர்த்தி தேசிகர் **(1923–1985)** முக்தி பெற்ற பின்னர் **29–**ம் பட்டமாக நிரம்பவழகிய தேசிகராகிய ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரியார் ஞானச்செங்கோல் செலுத்தி வருகிறார்கள்.

இவர்கள் **8.10.1942**ல் உதித்தார்கள். இவர்கள் அறுபதாம் ஆண்டு தொடக்கவிழா **15.10.2001** அன்று நிகழ்ந்தது. **1952–**ல் சமய தீட்சை பெற்றார்கள். தந்தையும் குருவுமான ஆதீனகர்த்தரிடம் வடமொழியும் தோத்திர சாத்திரங்களையும் கற்றார்கள். குன்றக்குடியில் E.S.L.C. யும் காரைக்குடியில் S.S.L.C.யும் பயின்றார்கள். **6.6.62**ல் மூங்கில் பட்டியில் பிறந்த திரு வைத்தியலிங்கம் பிள்ளையின் புதல்வி சுசீலா அம்மையாரை மணந்தார்கள். தமது மாமனார் வேண்டிக் கொண்டபடி கர்ணம் மானுவல், கர்ணம் டெஸ்ட், சர்வேடிரையிங், ஹெட்மென் டெஸ்ட், கிராம சுகாதாரம், அதிகாரங்களும் அலுவல்களும் ஆகிய தேர்வுகளில் வெற்றி பெற்று கர்ணமாகவும், குன்றக்குடி V.A.O. வாகவும் பணியாற்றியுள்ளார்கள். **1964**ல் விசேட தீட்சை பெற்று ஆன்மார்த்த சிவபூஜை செய்யும் தேசிகரானார்கள். **1980**ல் பிராணாயாமப் பயிற்சி பெற்றார்கள். **1984**ல் நிர்வாண தீட்சை, அஃனிகார்யம் கிரியா அபிஷேகம் பெற்றுக் குருக்கள் என்னும் லோகதருமணியானார்கள். பின்னர் ஆச்சார்ய அபிஷேகம் பெற்று ஆச்சாரியார் என்னும் சிவதருமணியானார்கள். இவர்கள் 1. அநுட்டான விதிகள் 2. சைவ சமய விளக்கம் 3. சைவ சமயிகளே கேளுங்கள் 4. விக்ரக பூஜா விதிகளும் விளக்கங்களும் என்னும் நூற்களை செய்துள்ளார்கள்.

இவர்கள் 1998ல் திருக்கயிலாய யாத்திரை செய்து கயிலாய நாதனைச் சேவித்து வந்துள்ளார்கள். இவர்கள் கயிலை மணியாக விளங்குகிறார்கள். இவர்களுக்கு ஞான–சுந்தரேசன் M.A.,M.A., B.Ed., ஞான – சாந்தா, ஞானவளர்மதி M.A.,BT., ஞான லலிதா B.A.,CLIS என்பவர்கள் மகனும் மகள்களுமாவர். இவர்கள் சகோதரர் B. தியாகராஜ தேசிகருக்கு சந்திர மோகன், தி. சுமதி, தி. சசிகலா ஆகியோர் மகனும் மகள்களுமாவர். இவர்கள் சஷ்டியப்த பூர்த்தி வருகின்ற புரட்டாசி மாதம் உத்தர நட்சத்திரத்தில் (5.10.02) நிகழவிருக்கின்றது. ஆதீன சீடர்களும், அன்பர்களும் அபிமானிகளும் அந்நந்நாளில் வாழ்த்தி வணங்கிக் குருவருள் பெறுவோமாக!

அண்மையில் சைவ ஆதீனங்கள் என்ற அரும் பெரும் நூலை வெளியிட்ட தவத்திரு ஊரன் அடிகள் இவ்வரலாற்றை எழுதத் தூண்டுகோலாக இருக்கின்றார்கள். அவர்கள் தம் நூலில் எழுப்பிய வினாக்களுக்கு விடையளிக்க முற்பட்டுள்ளோம்.

மெய்கண்டார் சிவஞான போதம் என்ற முதனூலை அருளிச் செய்வதற்கு முன்னரே திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனாரும், திருவியலூர் உய்ய வந்த தேவ நாயனாரும், திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் என்னும் இரு சாத்திர நூற்களைச் செய்துள்ளனர். ஆயினும் சிறப்புப் பற்றி சிவஞான போதமே முதலாவதாக வைக்கப்பெறுகின்றது. வேத நான்கினும் மெய்ப்பொருளான வேதாந்தத் தெளிவாம் சித்தாந்தம் சிவ வழிபாடு போல் அநாதியானது. திருமுறைகளில் பழமையான திருமந்திரத்தில் வெளிப்படையாகவே பதி, பசு, பாசம் பேசப்பெற்றுள்ளது. மூவர் தேவாரங்களில் ஆங்காங்கே சித்தாந்தக் கூறுகள் விரவியுள்ளன. மாணிக்கவாசகர் மாயா வாதமென்னும் சண்டமாருதம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். தோத்திரங்களிலிருந்து பிழிந்தெடுத்த சாறே சித்தாந்தம். பொதுவாக அநாதி காலந் தொட்டு வழங்கினாலும், மெய்கண்ட சாத்திரம், மெய்கண்ட சந்தானம் என்று மெய் கண்டாருக்கு முதன்மையளித்து வரும் மரபு மெய்கண்டார் அருளிய சிவஞானபோதம் பற்றிய சிறப்பினாலேயாம். அதனால்தான் மெய்கண்டாருக்கும் முன்பு இன்றைக்கு ஆயிரமாண்டுக்கு முன்பு

தோன்றிய பதினெண் சைவ ஆதீனங்களிலொன்றான தொண்டை மண்டல ஆதீன மடாலயத்துக்கு மெய்கண்டார் மடம் என்ற பெயர் விளங்குகின்றது. அங்கே மெய்கண்டேசுவரர் ஆலயமுமுள்ளது. இதிலிருந்து மெய்கண்டாருக்குமுன் தோன்றிய மடங்களும் மெய்கண்டாரது சிறப்புப் பற்றி மெய்கண்ட சந்தானம் என்று வழங்கப் பெறுகிறது. இதே முறையில் பதினெண் சைவ ஆதீனங்களில் இன்னொன்றான நிரம்ப அழகிய ஆதீனம் மெய் கண்ட சந்தானம் என்று வழங்கப் பெற்றுள்ளது.

இவ்வாதீனத் தலைவர்களனைவரும் நிரம்பவழகிய தேசிகரென அழைக்கப் பெறுவதாலே இவர்களால் ஆக்கப் பெற்ற நூற்கள் குறித்து மயக்கம் தோன்றுகிறது. அம்மயக்கத்தை ஒருவாறு தீர்க்க முயல்வோம். நிரம்ப வழகிய ஆதீனத்தில் தோன்றிய நூற்களில் முதன்மையானவை சகலாகம சார சங்கிரஹம், சிவஞான சித்தியாருரை, திருவருட்பயன் உரை, உண்மை நெறி விளக்கவுரை, சேது புராணம், திருப்பரங்கிரிப் புராணம் சிவ புண்ணியத் தெளிவு ஆகும்.

இவற்றுள் சகலாகம சார சங்கிரஹம் என்னும் வடமொழி நூல் இவ்வாதீன முதற்குரவர் (பூர்வாச்சிரமத்தில் சத்திய ஞானப் பிரகாசம் என்ற பெயருடைய) நிரம்பவழகிய தேசிகரால் அருளப்பெற்றது. இந்நூல் பத்ததிகள் தோன்றாத காலத்தில் தோன்றியது. பூர்வ கிரியைப் பத்ததி போன்றதாகும். இந்நூல் சிவஞான போதத்திற்கும் முற்பட்டது. இவர்கள் காலம் (கி.பி. 913–943).

இவ்வாதீனத்தின் பதினோராவது குரவர் (கி.பி.1226–1277) மெய்கண்டார் (1223) காலத்தில் உடன் வாழ்ந்தவர். இவர் மெய்கண்டாரது 49 சீடர்களில் இளமையானவர் ஆவார். இவர் சிவஞான சித்தியாருக்கு உரை கண்டுள்ளார். இவர் உரையே சிவஞான சித்தியார் உரைகளில் காலத்தால் முந்தியது.

பத்தொன்பதாம் பட்டம் நிரம்பவழகிய தேசிகராகிய சிதம்பர தேசிகர் (கி.பி.1597–1629) பட்டத்துக்கு வரு முன்னர் கமலை ஞானப் பிரகாசர் இவரது வித்யா குருவாவார். கமலை ஞானப் பிரகாசரே தருமையாதீன குரு முதல்வர் குருஞான சம்பந்தருக்கும் தீட்சா குரு ஆவார். 19–ஆம் பட்டம் நிரம்பவழகிய தேசிகர் திருவருட் பயன்,

உண்மை நெறி விளக்கம் ஆகியவற்றிற்கு உரை கண்டுள்ளார்கள். இவர்களது உண்மை நெறி விளக்கவுரை சித்தாந்தப் பாடம் பயிலத் தொடக்கமாக அமைகிறது.

பின்னர் இராமேசுவரம் தல விஷயமாக **3438** பாடல்கள் கொண்ட சேது புராணம் பாடினார்கள். இது பெருங் காப்பியத் தன்மை அத்தனையும் நிறைந்தது. சொல்வளம், பொருள்நயம், கற்பனைத்திறம் அனைத்தும் நிறைந்தது. திருக்குறளின் விளக்கமாகப் பற்பல செய்திகளை ஆங்காங்கே அமைத்துக் காட்டுவார். இராமேசுவரம் எத்தனை விதமான பாபங்களைப் போக்கும் என்று பாபவகைகளைக் கூறும்போது, ஒரு வழி தெரிந்தோன் அதனைத் தெரியாதவை ஆற்றுப்படுத்தத் தவறுவதும் பாவம் (கரவுடைய கல்வியுளார் கடைவாசலில் சென்று இரவா வகை மெய்ப்பொருள் பேசியவா – திருப்புகழ்) என்கிறார். இத்தகைய பாபங்களைப் போக்கும் இராமேஸ்வரம் நன்றி மறந்த பாபத்தைப் போக்காது என்று கூறி 'உய்வில்லை செய் நன்றி கொன்ற மகற்கு' என்ற குறள் மொழிக்கு அரண் சேர்க்கிறார். இந்நூலை முகவை மன்னர் பேரவையில் அரங்கேற்றி விருதுகள் பெற்று மதுரையை அடைந்தார்.

பின்னர் மதுரை மன்னர் வேண்டுகோளுக்கிணங்க மதுரைக்கு வர ஏதுவாக தம் குமாரருக்கு 20வது அதிபராகப் பட்டம் கட்டி விட்டு மதுரைக்கு வந்து யோக நிட்டை கூடினார். இதனையறிந்த மதுரை மாமன்னன் சுவாமிகளை அழைத்து உபசரித்து திருப்பரங்குன்றத்தில் மடம் அமைத்துத் தங்கச் செய்தான். அங்கே பல சீடர்களுக்கு சாத்திரப் பாடங்கள் கற்பித்து வந்தார்கள். அவர்களுள் முக்கியமானவர்கள் திருவையாற்றுப் புராணம் இயற்றிய ஞானக் கூத்தர் மற்றும் திருவாரூர்ப்புராணம் இயற்றிய அளகை சம்பந்த முனிவர் ஆவர்.

இயற்கையிலேயே முருக பக்தரான இவர் திருப்பரங்குன்றத்தில் வசித்த போது முருகன் புகழ் பாடும்

திருப்பரங்கிரிப் புராணம் இயற்றினார்கள். இதில் பதினொரு சருக்கங்களும் 526 பாடல்களும் உள்ளன. இந்நூல் 1928–ல் அச்சில் வெளி வந்துள்ளது. மேலும் 53 பாடல்களைக் கொண்ட பன்னிரண்டாவது கிரிவலச் சருக்கம் இன்னும் ஏட்டிலேயே உள்ளது. திருப்பரங்கிரிப்புராணம் அணிநயம், சொன்னயம், பொருணயம் சிறப்பாகக் கொண்டது.

குமரக் கடவுளுக்கு வணக்கம் கூறுமிடத்து

"வேலை தனிலே வேலையிட வேலை புரிந்தான்
பதம் பணிவாம்" என்றும்

'அப்பணிதஞ் சிரத்தேந்தி யப்பணி வோனருள்
குமரனருளை யெண்ணா'

இப்பகுதிகளில் அணிநயம் சிறப்பாக உள்ளது. (சொற்பொருள் பின்வரு நிலையணி)

"..........குமரவே ளவன்கனவு பொருந்தத்
தோன்றி யவனிதனிற் கிழவனென வரச்
சிறிது நாளா மென்றறைந்து"

இதில் சொன்னயம் விளங்குகிறது. (முரண் தொடை)

"நீறணி கடவுள்மண் ணின்றெ டுத்திடப்
பார்முழு தாண்டருள் பாண்டி யன்கையா
லோரடி வவியவே யுதவி மற்றர
னீரடி வாங்குமோ ரிறையைப் போற்றுவோம்"

சிவபெருமான் மண்சுமக்கும்படி இவ்வுலகத்தையாளும் பாண்டிய மன்னன் தன் கைப்பிரம்பால் ஒரடி அடிக்கச் செய்து அப்பெருமானது இரண்டு திருவடிகளையும் வாங்கிக் கொண்ட மாணிக்கவாசக சுவாமிகளை வணக்கம் செய்வாம் என்பதில் பொருணயம் தோன்றுகிறது. "தந்ததென் தன்னைக் கொண்டதுன் தன்னை சங்கரா

யார்கொலோ சதுரர்" என்ற திருவாசக அடிகளை நோக்குக.

இவர்கள் சேய்த்தொண்டர் புராணத்தில் ஒரு முருகனடியாராகக் குறிப்பிடப் பெற்றுள்ளார்கள்.

சேய்த்தொண்டர் புராணம் சேக்கிழார் சுவாமிகளின் திருத்தொண்டர் புராணத்தைப் போன்று திருவருள் பெற்ற முருகனடியார்கள் பெருமைகளைக் கூறும் நூலாகும். திருத்தொண்டர் புராணமாகிய பெரிய புராணத்தில் தில்லை வாழ்அந்தணர் சருக்கம் தொடங்குவது போல் சேய்த்தொண்டர் புராணத்தில் செந்தில் வாழ் அந்தணர் சருக்கம் தொடங்குகிறது. இப்புராணத்தில் கூறப்பெற்ற முருகனடியார்களில் நக்கீரர், அகத்தியர், கல்லாடர், ஔவையார், சேந்தனார், கச்சியப்ப சிவாச்சாரியார், பொய்யாமொழிப் புலவராகிய சிவகவி, அருணகிரிநாதர், நிரம்ப அழகிய தேசிகர் (துழாவூர் 19–ஆம் பட்டம்) துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள், குமரகுருபர சுவாமிகள், அந்தகக் கவி வீரராகவ முதலியார், சீர்காழி சிற்றம்பல நாடிகள், பகழிக் கூத்தர், கச்சியப்ப முனிவர், கலசை சுப்பிரமணிய முனிவர், காஞ்சிபுரம் சிதம்பர முனிவர், கவிராஜ பண்டாரத்தையா ஆகியோர் ஒரு சிலர் ஆவார்கள்.


இச்சேய்த் தொண்டர் புராணத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு முன்னிருந்த 41 முருகனடியார்களின் வரலாறு கூறப்பெற்றுள்ளது. இந்நூலைப் பாடியவர் வரகவி தேனூர் சொக்கலிங்கம் பிள்ளையாவார். இப்புராணம் முருகவேள் பன்னிரு திருமுறைத் திரட்டில் பன்னிரண்டாம் திருமுறையாக வைக்கப் பெற்றுள்ளது. இப்புராணத்தில் கூறப்பெற்ற அடியார்களில் 17வது அடியாராக துழாவூர் ஆதீனம் 19வது பட்டம் நிரம்பவழகிய தேசிகராகிய ஸ்ரீலஸ்ரீ சிதம்பர தேசிகர் வைக்கப் பெற்றுள்ளார்.

எனவே துழாவூராதீனம் தமிழும் வளர்த்த ஆதீனமாகும்.

திருச்சிற்றம்பலம்

குருபூஜைகளில் அறமனச் செம்மல் விருது பெற்றோர்

1. செட்டிநாட்டுக் கோமகன் **ஆர். இராமநாதன் செட்டியார்**, கானாடுகாத்தான்.
2. வள்ளல் **சேவு. அண்ணாமலை செட்டியார்**, தேவகோட்டை.
3. மெய்யன்பர் **சோம. இயற்பகை செட்டியார்**, வேந்தன்பட்டி.
4. தொழிலதிபர் **லெ. நாராயணன் செட்டியார்**, கண்டரமாணிக்கம்
5. பெரியவர் **நாக. இராம. இராமசாமி செட்டியார்**, பொன்புதுப்பட்டி
6. இலக்கியச் சிந்தனை **ப. லெட்சுமணன்**, கண்டனூர்
7. சிவத்தொண்டர் **பழ. நாக. இராமநாதன் செட்டியார்**, அலவாக்கோட்டை
8. பெரியவர் **கா. அரு. காடப்ப செட்டியார்**, ஆத்தங்குடி.
9. திருமுறைக் காவலர் **இராம.முத்துப்பழனியப்பசெட்டியார்**, பாகனேரி
10. பேராசிரியர் **டாக்டர் இராம. மெய்யப்பன்**, கடியாபட்டி.
11. சிவநெறிச் செல்வர். **உ.ராம.உடையப்ப செட்டியார்**, காரைக்குடி.
12. இலக்கியச் செல்வர் **நா. இராமசாமி செட்டியார்**, செம்பனூர்.
13. நாகை **அ.சொ.மு.அரு. முத்துச் செட்டியார்**, விரையாச்சிலை.
14. உயர்திரு.**பெ.சித.லெ.சுப்பிரமணியன் செட்டியார்**, சண்முகநாதபுரம்
15. உயர்திரு.**ஆ.மு.ஆ.முரு.சுப.மாணிக்கம் செட்டியார்**, கல்லல்.
16. உயர்திரு.**எஸ்.எம்.ஆர்.எஸ்.சுப்பையா செட்டியார்**, கோனாபட்டு.
17. கயிலைமணி **மு.பழ.கண்ணப்பச் செட்டியார்**, பாகனேரி.
18. செவ்வூர் **பழ. சொக்கலிங்கம் செட்டியார்**



ஸ்ரீ வாஞ்சியம் அருள்மிகு வாஞ்சிநாதப் பெருமான்
திருக்கோயில் விமானத்தில் ஸ்ரீ நிரம்ப அழகிய தேசிக
சுவாமிகள் செட்டிகுலப் பெண்ணிற்கு உபதேசம்
செய்யும் சுதைச் சிற்பம்

உ
சிவமயம்

சீடர் குழுவின் பணிகள்

1. தமிழகத்திலுள்ள சைவ ஆதீன மடாலயங்களின் ஆதி முதல்வர் குருபூசையன்று திருமடாலயங்களுக்குச் சென்று மகா சந்நிதானத்திற்கு பாத காணிக்கை செலுத்தி ஆசி பெற்று வருவது.

2. மகா சந்நிதானங்கள் மதுரைக்கு எழுந்தருளும் போது, அவர்களை தக்க மரியாதையுடன் வரவேற்று நகர் வலம் வருவது மற்றும் சைவ அன்பர்கள் ஆசி பெற உதவுவது.

3. சைவ ஆதீனங்களுக்கும், சைவ சமுதாய அன்பர்களுக்கும் இடைவெளி இல்லாமல் பாலமாகச் செயல்படுவது.

4. சைவத் திருமுறைப் பாராயணம் ஓதுவது, ஓதுபவர்களை ஊக்குவிப்பது.

5. திருமுறை மற்றும் பக்திப் பாடல்களை இலவசமாக வெளியிடுவது ஆகியன.

அபிராமி அச்சகம், திருநகர், மதுரை - 6 ☎:483085.